செ.வெ.எண். 51/அக்டோபர் தேதி : 24.10.2016

# தருமபுரி மாவட்டம்

## தருமபுரி மாவட்ட சுகாதார சார்பில் டெங்கு ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.




தருமபுரி மாவட்ட சுகாதார சார்பில் டெங்கு ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியரின் கூடுதல் கட்டிட வளாகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது :-

கூட்டத்தில் கொசுவினால் பரப்பப்படும் மலேரியா, டெங்கு, மற்றும் சிக்கன்குன்யா நோய்கள், தண்ணீரால் பரவக்கூடிய டைப்பாய்டு காலரா போன்ற நோய்கள் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பாக விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டுள்ள பேரல்கள், தொட்டிகள், பானைகள், பாத்திரங்கள், ஆகியவைகளில் கொசுக்கள் உற்பத்தியாகும். அத்தைகய இடங்களை மூடிவைக்கவும் வாரம் ஒருமுறை கழுவி சுத்தம் செய்யவும் தண்ணீர் திறந்த நிலையில் இல்லாதவாறு மூடி வைக்கவும், தேவையற்ற, உபயோகமற்ற வீசியெறியப்பட்ட உடைந்த பிளாஸ்டிக் பொருட்கள், பிளாஸ்டிக் கப், டயர்கள், தேங்காய் மூடிகள் மற்றும் மழைநீர் தேங்கக்கூடிய அனைத்து பொருட்களும் உடனுக்குடன் அப்புறப்படுத்த வேண்டுமெனவும் மற்றும் கொசுப்புழு ஒழிப்புப் பணியில் ஈடுபட்டுள்ள களப்பணியாளர்களுக்கு பொது மக்கள் ஒத்துழைப்பு தர வேண்டும் எனவும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுத்தினார்.

டெங்கு நோய் தடுப்பு பணியில் மாணவர்களும் தங்களது வீட்டில் கொசுப்புழு பெருகும் இடங்களை கண்டறிந்து கொசுப்புழுக்களை அழிக்கவும், ஆசிரியர்கள் மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அறிவுத்தப்பட்டது.

நகராட்சி, பேரூராட்சிகள் மற்றும் கிராம ஊராட்சி ஆகிய பகுதிகளில் உள்ள உணவு விடுதிகள், தங்கும் விடுதிகள், திரையரங்குகள் மற்றும் திருமண மண்டபம் ஆகிய பகுதிகளில் கொசுப்புழு ஒழிப்பு பணிகளை மேற்கொள்ளவும் முதிர் கொசுக்களை அழிக்கவும் அடிக்கடி புகைமருந்து அடிக்கவும் அறிவுறுத்தப்பட்டது.

நகராட்சி, பேரூராட்சிகள் மற்றும் கிராம ஊராட்சி ஆகிய பகுதிகளில் உள்ள பிளாஸ்டிக் கிடங்கு (Dump yard) களில் ஆய்வு மேற்கொண்டு தண்ணீர் தேங்காமல் மற்றும் கொசுப்புழு வளராமல் இருக்க சுகாதாரத்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை

இணைந்து ஆய்வு செய்து தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டது.

மேலும், காய்ச்சல் கண்டவர்கள் அருகில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு பொது மருத்துமனைகளுக்கு செல்லவேண்டுமெனவும், காய்ச்சல் கண்டவர்களுக்கு நிலவேம்பு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது என்றும் கூறினார். நீர் நிலைகளில் கம்பூசியா மீன்களை விடவும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) திரு. எம். காளிதாசன், இணை இயக்குநர் (ஊரக நலப்பணிகள்) மரு. ஜானகி, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு. ஜெகதீசன், உதவி இயக்குநர் (கிராம ஊராட்சி) திருமதி. விமலாதேவி, தாட்கோ மேலாளர் திரு. வைத்தியநாதன் மற்றும் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.